Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண். 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 96

யாழ்ப்பாணம் வைகாசி 5 ரபிஉல் 23 புதன்கிழமை (19-5-71)

மக்கள் விரும்பி வாங்குவது
எவர் பிறைற் சோப்
மணம் குணம் சுவை நிறைந்த பிறேமா லோட்டஸ் தூள் தேயிலை

பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை

சர்வதேச விமான நிலையத்தில்

அனுதாவாகக் கிடந்த 5000 டாலர் இரத்தினக்கற்கள்!

கடத்தமுயன்றவர்கள் தனமறைவு

கோண்டை, செவ்வாய் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அனுதாவாகக் கிடந்த 5000 அமெரிக்க டாலர் பெறுமதிவாய்ந்த இரத்தினக்கற்களும், பிரபாணிகளுக்கான காசோலைகளும் சுங்கப் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

விமான நிலையத்தின் ஏற்று மதிப்பகுதியில் நேற்று கிடக்கைக்காணப்பட்ட தேயிலைப் பெட்டிகளுக்குள் இந்த இரத்தினக்கற்கள் மறைத்துக் காணப்பட்டதாக சுங்கப் பகுதி தெரிவித்தது.

40 இரத்தினக்கற்களும், காசோலைகளும் கொண்ட இந்தப் பார்சலின் பெறுமதி 5000 அமெரிக்க டாலர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இலங்கையிலிருந்து இவற்றை கடத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்ததால், சந்தேகநபர்கள் இந்தப் பார்சலினை கைவிட்டுவிட்டு தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது. இந்த முயற்சியில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதில் சுங்கப்பகுதி தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அவசரகாலம் நீடிப்பு

கோண்டை, செவ். அவசரகாலச் சட்டம் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவ விடுத்த ஓர் அறிவித்தலில் மே 15-ம் திகதி தொடக்கம் அவசரகாலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேயர்களின் செலவினங்கள் பற்றி ஆராய்வு

கோண்டை, செவ்வாய் 1967-ம் ஆண்டிலிருந்து இலங்கையில் நடைபெற்ற சர்வதேச உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை மேயர்களின் செலவுகள் பற்றி நிதிச்சேரி வாரியதரிசி திரு சி. ஏ குரே ஆராய்கிறார். சில மாநகரசபைகள் 10,000 வரை மேயர்களின் போக்குவரத்துக்கு செலவழித்துள்ளனவாம். மாநகரசபை சட்டங்களின் படி இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்ய முடியாதாம்.

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 347 வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு

முதலாவது பரிசு
07 Z 0247 ரூபா 65,430

இரண்டாவது பரிசு
27 Y 0877 ரூபா 26,172

மூன்றாவது பரிசு
05 Z 0046 ரூபா 6,543

தலா ரூபா 237-15 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் இலக்க முடிவுகள் வருமாறு:

27 N 0691	10 C 0938
16 D 0494	25 W 0082
12 T 0915	20 N 0476
28 N 0093	06 F 0343
08 C 0194	04 F 0369
14 U 0571	25 A 0292
14 K 0830	01 R 0017
13 D 0545	19 W 0094
05 M 0070	11 E 0787

01 G 0061

(இவ்விலக்கம் உறுதிப்படுத்தப் படவேண்டும்.

தொடர்ந்து பாடசாலை நடக்கும்?

கோண்டை, செவ் பாடசாலைகள் திறக்கப் பட்டதும், குறிப்பிட்ட அரசாங்க விடுமுறை நாட்களிலும், போயாவுக்கு முன் தினங்களிலும் நடாத்துவதற்கு கல்வியமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

பயிற்சிராதிகளின் நடவடிக்கைகளிலும் பாதிக்கப் பட்ட காலத்தை சமப் படுத்தும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகிறது.

ஆகஸ்ட் மாதத்தில் வரும் இரண்டாம் தவணைக்கான விடுமுறை நாட்களில் ஒருவாரமாகக் குறைக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதேவேளையில் ஜி சி ஈ சாதாரண பரீட்சையும் வடுடன்ந்த தேர்வுப் பரீட்சைகளும் திட்டமிட்ட படி நடத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

ஜூன் மாதம் 2-ம் திகதி மட்டில் பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இது பற்றி மந்திரிசபை இப்போது ஆலோசித்துவருகிறது.

நன்கொடை

கோண்டை, செவ். 17,256 அரிசிக் கப்பன் புள்ளிகளை தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா தலைமையில் சென்ற தூதுக்குழு ஒன்று வர்த்தக அமைச்சர் திரு. ஸ்ரீ. பி. இலங்கரத்தினவிடம் நன்கொடையாகக் கையளித்தது.

கொறணைப் பகுதியிலும் இற்றப்பன கிராமசபைப் பகுதியிலும் பயிகரவாதிகளின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோர் நிதிக்காக இந்தக் கூப்பன்கள் சேர்க்கப்பட்டன. இக் கூப்பன்களின் பெறுமதி இருபது ஆயிரம் ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த முறையை நாட்டு மக்கள் அனைவரும் பின் பற்றி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று டாக்டர் கொல்வின் கேட்டுக் கொண்டுள்ளார்.

வளர்த்த நாய் எஜமானுக்கு எமனானது

கருநகர், செவ்வாய் தன்னை வளர்த்த எஜமான் மார்பில் பாய்ந்த ஒரு நாய் எஜமானின் உயிரையே பலி கொண்டு விட்டது. தெல்லிப்பளையைச் சேர்ந்த செருக்கப்புலம் என்றவிடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. இவ்விதபரிதாப மரணத்திற்குள்ளானவர் ஒரு ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜண்டாவர்.

தமது துப்பாக்கியைத் துடைத்துச் சுத்தம் செய்த இவர் தாம் அன்புடன்வளர்த்துவந்த அல்சேஷன் நாய்க்கு நேராகத்துவக்கைநீட்டி 'குளப்படி செய்தாயானால் உன்னைச்சுடுவேன்' எனச் செல்லமாகப் பயமுறுத்தி வந்தாராம். எனதேரத்தில் பக்கத்தில் கட்டியிருந்த அந்த நாய் சங்கிலியை அறுத்துக்கொண்டுஎஜமான் மீது பாய்ந்து அவரைத்தாக்கியது விடயம் அயலவர்களும் அவ்விடத்திற்கு ஓடிவந்தனர். அதற்குள் அவர் பரிதாபமாக உயிரிழந்துவிட்டார். அவரது மனைவியும் அயலவர்களும் நாயுடன் போராடும் போராட்டம் நடத்தி எஜமானை மீட்டுவிட்டனர். நாய் சுட்டுக்கொல்லப்பட்டது.

நாயினால் தாக்கப்பட்ட அதன் எஜமான் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு சுகமடைந்து திருநாராம் சுமார் மூன்று நாட்களின் முன் திடீரிஜூரம் ஏற்பட்டதைத்தொடர்ந்து ஆஸ்பத்திரியில் மீண்டும் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று மரணமானார்.

சில நாட்களின்முன் தமது நாயுடன் சேர்ந்து விளையாடிய வேறொரு நாயை இவர் கட்டுக்கொன்றதாயும் அந்த நாயின் நட்பினால் தமது உயிரை நாய் கொடுத்திருக்கலாம் எனவும் அவர் கூறி வந்ததாயும் எஜமான் தனது நன்பனைச் சுட்டதை அல்சேஷன் அவதானித்திருந்தாலும் கூறப்பட்டது

அறிவித்தல்

சிமேந்து விநியோகம்

யாழ்ப்பாண மாவட்டம்

பாவனையாளர்களுக்குச் சிமேந்து விநியோகம் செய்வதற்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதியளவு சிமேந்து வழங்கப்பட்டு வருகிறது. சிமேந்து வேலைப்படுவோர் பிரிவுக் காரியாதிகாரியின் சிபாரிசுடன் அங்கமையிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தங்கள் தேவைகளைப் பெறுமாறு வேண்டப்படுகின்றனர் 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் இந்த ஒழுங்கு நடைமுறையிலிருக்கும்.

ஜூனி முதலாம் திகதி தொடக்கம் 25 பைகளுக்கு மேல் தேவைப்படுவோர், காங்கேசன் சிமேந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் கிடைக்கும் ஓர் விண்ணப்பப் பத்திரத்தில், காங்கேசன் சிமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சிமேந்து பெற்றுக் கொள்ளலாம். 25 பைகள் வரை தேவைப்படுவோர் தொடர்ந்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஏ பிரான்சிஸ்.
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சிமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
18-5-1971.

ஊரடங்கு நேரம்

இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4-30
மணி வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

கோழிகள்:
100 முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் வேலுப்பிள்ளை முருகேசு, நெடுங்காடு, காரைநகர் என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். 3113

புதுமைலோலன் எழுதிய குறுநாவல், 'உடுக்கை ஜோஜா' இரண்டாம் பதிப்பு விற்பனையாகின்றது: விலை 50 சதம் மட்டுமே. 50 சத தபாற்றலையனுப்பினால் அனுப்பும் செலவு இலவசமாகும். அன்பு புத்தகசாலை, 17 டி, பெரியகடை, யாழ்ப்பாணம். 3111

தேவை

எல்லா வகையான உடுப்பு வகைகளும் வெட்டவும், தைக்கவும் மூன்று வருட அனுபவம்வாய்ந்த பெண் தொழிலாளர்கள் மட்டும் 25-5-71-க்கு முன் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். நகுல தேசிய உடைத் தொழிற்சாலை, மேலபா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3115

தாவடி, செல்வ கொக்குவில் மேற்கு வேம்படி முருகன் ஆலயத்தின் மூலஸ்தான மூர்த்தியின் மண்டபப் புனருத்தாரண வேலைக் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது

ராணி (யாழ்ப்பாணம்) மொழி கனேஷன் கேட் ஷோ. விஜய
தினசரி காலை 10-00 பி.ப 2-00 நடந்த
ராமன் எத்தனை ராமனடி

நீகல் இப்பொழுது நடைபெறுகிறது (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00
ராஜ்கபூர்—ராஜ் ஸ்ரீ — மொகமூத்
AROUND THE WORLD
(ஹிந்தி) டெக்னிக்கலர்
இசை சங்கர் ஜெய்கிஷன்
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய படம்

மகத்தான 53-வது தினம்
கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) மாஸ்டர் பிரபாகர் பேபி கமலி - லேட்டஸ்ட்
தினசரி நடந்த
காலை 10-30 பி. ப 2-00
வா ராஜா வா

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்காராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல் காலை 10, பி ப 2-00 மணி — கை கொடுத்த தெய்வம்
கிங்ஸ்லி காலை 10, பி.ப 2-00 மணி — அன்பே வா
மைலன் காலை 10, பி.ப 2-00 மணி — எதிரிகள் ஜாக்கிரதை
பிளாஸா காலை 10, பி. ப. 2-00 மணி — பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(மரிமச் தெதிரம்)

தேவை

ஆங்கில வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட இளைப்பாறிய பெண் அதி தெரிவுடன் தேவை பகல் வேலை மட்டும். விபரங்களுக்கு: Dr. R. சோமசுந்தரம், மத்திய வைத்திய நிலையம், நெல்லியடி, வரவெட்டி. 2479

மருதனுமடம் சந்தி-(பெற்றோல்செட்முன்னால்)புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணேசபவான் ஒட்டலுக்கு கஷியர் - மேனேஜர் குசினி வேலைக்காரர் பதினாறுபவர்கள் தேவை. விரும்புவோர் 25-5-71 திகதிக்கு முன் நேரில் சமுகம் தருக. கஷியர், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். 3101

பாடசாலைகளில் நடன வகுப்பு

அரியாலை, செல்வாய் பாடசாலைகளில் நடன ஆசிரியர்களை நியமனம் செய்ய கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் இலங்கை பூராவும் சுமார் ஐம்பது பாடசாலைகளில் நடன ஆசிரியர்களை நியமிக்க அமைச்சு முடிவுசெய்துள்ளதாகவும், இன்னும் ஐந்து வருடங்களுக்குள் இலங்கை பூராவும் சுமார் 200 நடன ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

அரசின் இத்திட்டத்தின் மூலம் சகல மாணவர்களும் குறைந்த செலவில் நடனக் கலையைப் பயிலவும் நடனக் கலை முன்னேற்றமடைய வழி பிறப்பதுடன் நடன ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுமென்றும் தெரிகிறது.

நாகம்ஸ்சினிமா சுன்னாகம் தினசரி காலை 10-30, பி. ப. 2-30 ஜெமினி - ஜெய்சங்கர் நடித்த பூவா தலையா

வெஸ்லிசினிமா மானிப்பாய் தினசரி காலை 10-30, பி. ப. 2-30 ஜெய்சங்கர் — லாணிஸ்ரீ நடித்த நேர் வழி

ஸ்ரீ காலிங்கன் இணுவில் தினசரி காலை 10-30, பி ப.1-30 ஜெமினி — சௌகார்ஜானகி நடித்த இரு கோடுகள்

RAJAH - JAFFNA
Daily
10 30a m. 1-30&4-00p m.
Jason Robards
Stella Stevens
in
THE BALAD OF CABLE HOGUE

மனோகரா (யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Erig Porter
in
THE LOST CONTINENT
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி நடித்த
தபால் தபி

சாவகச்சேரி நகரசபை

கேள்விப்பத்திர விளம்பரம்

கீழே விபரிக்கப்படும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு இந்நகரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வேலைகள்

1. தாமோதரம்பிள்ளை ரோட்டிலிருந்து குசவமடம் 2ம் ஒழுங்கைக்கு ரோட்டுப் போடுதல்.
2. 4ம் வட்டார ரோட்டு வேலைகள்.
3. 1ம் வட்டார வடிகால் ரோட்டு வேலை.

கேள்விப்பத்திரங்கள் 27-5-71ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை இந்நகரசபை அலுவலகத்தில் அதற்கான வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் சரிந்த உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடது புறமாக இவ்வேலைக்குரிய வேலையை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகு போட்டு ஆடையாளம் வைத்து, 1971ம் ஆண்டு வைகாசி மாதம் 28ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

இதைப் பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறியவேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்: சு. கனகரத்தினம்
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
16-5-71. 3293

பொங்கல்

தாவடி, செல்வாய் தாவடி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தேர்முட்டிப் பொங்கல் விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. கொக்குவில் இணுவில் சுதுமலை ஆனைக்கோட்டைக் கிராமப் பகுதிகளிலிருந்து ஆலய மக்கள் வந்து தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிச் சென்றனர்.

பண்பாட்டு நூல்

தாவடி, நிருபர் "கந்தபுராணம் சிறந்த தொரு கலாச்சார நூல் சமுதாயத்தின் பண்பாட்டையும் சைவத் தத்துவத்தின் பெருமையையும் விளக்குவதான நூலாகும் அதைப் போற்றுதல் எம் கடமையாகும்" என தாவடி அம்பல வாணவேத விநாயகர் சாலையில் கந்த புராண படிப்பைத் தொடக்கி வைத்துப் பேசிய பிரம்மஸ்ரீ கணேசக்குருக்கள் கூறினார்.

சோலைவரி கட்டுவதில் ஆர்வம்

சுழிபுரம், செல்வ சுழிபுரம் கிராமசபைக்குச் சேரவேண்டிய சோலைவரிப் பணத்தைக் கட்டுவதில் தொல்புரம் கிராமம் முன்னணி வகிக்கின்றது. கடந்த சில தினங்களாக தொல்புரம் கிராம மக்கள் வரிப்பாக்கியைத் தீர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர். வரிகட்டாதவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக

சங்கானைப் பட்டினசபை

கேள்விவிளம்பரம்

1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி (4-6-71) காலை 10 மணி வரை மேற்படி பட்டினசபைத் தலைவராகிய கீழே குறிப்பிடும் வேலைக்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. மேற் குறிப்பிடும் கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் பத்திரப் பணமும் செலுத்திய தன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 3-6-71 காலை 10 மணி வரையும் வழங்கப்படும். இது ஒரு அரசாங்க நன்கொடை வேலையாகும்.

ஏனைய விபரங்களை சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சாந்தலுவத்தை வீதி கல்லால் கட்டுதல்.....

கேள்விப் பிணப்பணம் ரூபா 100/-
கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/-

கி. ஸ்ரீரமுத்து
தலைவர்,
பட்டினசபை, சங்கானை

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை,
16-5-1971. 3292



உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், செல்வ வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு. அ சேரமாஸ்கந்தர் வெளிநாட்டு உள்நாட்டுவர்த்தகஅமைச்சினால் நல்லூர் தொகுதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை இலாகாவினாலும் லங்கா சதொசலா நிருவனத்தினாலும் நிர்வகிக்கப்படும் சகல டிப்போக்களுக்கும் கடைகளுக்கும் அத்துடன் விற்பனவு வசதி இலாகாவாலும் பொருட்கொள்வனவு இலாகாவாலும் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு யூனியன்கள் சங்கங்கள் கடைகள் சேமிப்பு நிலையங்களுக்கு ஆகியனவற்றுக்கும் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணம் மேர்க்கண்டைல் வங்கியில் கடமையாற்றி இளைப்பாறியவர். யாழ்ப்பாண ஐக்கிய மாதான வங்கி அதி காரசபை அங்கத்தவரும் வண்ணார்பண்ணை பயிர்ச் செய்கைக்குழுத் தலைவரு மாவார்.

நியமனம்

அரியாலை, செல்வாய் வடபெரும்பாக தபால் அத்தியட்சராக தபால் தந்தி அலைச்சின் உதவிச் செயலாளராயிருந்த திரு. எம். நடராசா நியமிக்கப் பட்டிருக்கிறார்.

சுழிபுரம், செல்

சுழிபுரம் கிராமசபையில் பிரதம லிகிதராகக் கடமை யாற்றிய திரு. எம் ஆரோக்கியநாதன் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அக்கரைப்பற்று மத்தி கிராமசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

விதிக்கப்பட்டுள்ள காலக் கெடு நெருங்கியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பாக். அகதிகள் பிரச்னைக்கு இந்தியாவின் 5 அம்சத்திட்டம்

ஐ. நா. விடம் தாக்கல்

வாஷிங்டன் மே 18

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கவும், அவர்களை வங்காள தேசத்திற்குத் திருப்பியனுப்பவும் வழிசெய்வதான ஐந்து அம்சங்களைக்கொண்ட திட்டமொன்றினை இந்தியா சமர்ப்பித்திருக்கின்றது.

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் பிரச்னையில் இந்தியாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக கனடா உறுதியளித்திருக்கின்றது.

அகதிகள் பிரச்னையில் சர்வதேச உதவிகள் போதுமான அளவு இல்லாததால் இந்தியாவே இந்தப் பாரத்தைச் சுமக்கத் தயாராகிவருகிறது என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதல்களின் காரணமாக இந்தியாவுக்குள் வந்து குவிந்துகொண்டிருக்கும் அகதிகளின் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கென இந்தியா ஐ நா விடம் ஐந்து அம்சத் திட்டமொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றது. இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. சமர்சென் இந்தத் திட்டத்தை ஐ நா பொருளாதார சமூகநலக் குழுவிடம் சமர்ப்பித்தார். அவர் அங்கு பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சென்று திரும்பியபத்திரிகை நிருபர்கள் வெளியிட்டுள்ள தகவல்களைக் குறிப்பிட்டார். அங்கு எப்படியான அட்டூழியம் நடைபெறுகின்றது என்பதை இந்த நிருபர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள் என்று அவர் கூறினார். ராணுவத்தின் கொடுமைகளின் காரணமாக இதுவரை 25 லட்சம் பேருக்கு மேல் இந்தியாவுக்குள் அகதிகளாக வந்துசேர்ந்துள்ளார்கள் என்றார் அவர். ராணுவத்துக்கு எதிர்ப்புக் காட்டுபவர்கள் அனைவரும் கொல்லப்படுகிறார்கள். இல்லையெனில் புகலிடம் தேடி ஓட நேருகிறது என்று திரு சென் குறிப்பிட்டார். இந்த அகதிகளின் நிவாரணத்துக்கென சர்வதேச உதவிகள் உடனடியாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்திய திரு சென் கிழக்குப் பாகிஸ்தானில் அமைதியேற்பட வழிசெய்வதுடன் அகதிகளாய் வந்த மக்கள் திரும்பிப்போகவும் உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கனடா உதவும்

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள பாகிஸ்தான் அகதிகளின் நிவாரணத்துக்கு உதவி புரிவதாக கனடா அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இந்தியாவுக்கு கனடா வழங்கவிருக்கும் உதவிகள்பற்றி கனேடிய ஆட்சிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது இது பற்றி கனடாவிலுள்ள இந்திய தூதுவரிடம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் கனேடிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். ஆனால் உதவிகள் பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

சுவீடிஷ் பத்திரிகை கருத்து

பாகிஸ்தான் அரசு கிழக்குப் பாகிஸ்தானில் கொலைகளையும் அட்டூழியங்களையும் புரிந்து வருவதால் அந்த நாட்டுக்கு உதவிகள் வழங்குவதை சுவீடன் நிறுத்தி விடவேண்டும் என்று சுவீடிஷ் பத்திரிகை யொன்று தலையங்கம் தீட்டியிருக்கின்றது.

கெய்ரோவில் ஜெயப்பிரகாஷ்

வங்காள தேச மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உலகநாடுகளின் ஆதரவைத் திரட்டும்முகமாக வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுள்ள சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இப்பொழுது கெய்ரோ வந்தடைந்துள்ளார்.

திரு ஜெயப்பிரகாஷ்நாராயண் ஐக்கிய அரபுக் குடியரசில் தலைவர்கள் பலரைச் சந்தித்து வங்காள தேசமக்களின் விடுதலைப்போராட்டம் பற்றி எடுத்துரைப்பார் என்று தெரிகின்றது. அவர் ஏற்கெனவே பாலஸ்தீனவிடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். திரு அரபாத் வங்காள தேச மக்களுக்கு தமது அனுதாபத்தைத் திரு நாராயணிடம் தெரிவித்திருக்கிறார் என்று கூறப்பட்டது.

மழையினால் 12 பேர் பலி

புதுடில்லி, மே 18

அலகாபாத் நகரில், அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று இடியுடன் பெருமழை பெய்ததில் 12 பேர் மரணமானார்கள். நூற்றுக்கு மேற்பட்டவர்ள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

'பிக்பென்' மணியோசை

லண்டன், மே 18

வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கோபுர மணிக்கூண்டு உலகத்திலேயே மிகப் பெரிய நேரப் பொறியாகக் கருதப்படுகிறது. பி. பி. ஸி.யின் உலக சேவையில் நாளாந்தம் சமிக்ஞை ஒலியாகக் கேட்பது இந்தமணியின் ஓசைதான். உலகின் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இம்மணியோசை பிரிட்டனை நினைவுபடுத்தி விடுகிறது.

இந்த இராட்சத மணிக்கூண்டின் நேரம் காட்டும் கைகளின் நிறை மட்டும் ஒன்றரைத் தொன்! இதன் பன்னிரண்டு அடி நீளமான மணி அடிக்கும் குண்டு கால் தொன் நிறையுள்ளது. ஒரு வாரத்தில் மூன்று தடவை இம்மணிக்கூண்டைமின்சார மூலம் சாவி கொடுத்து இயக்கிவிட வேண்டும். இப்படி ஒவ்வொரு தடவையும் சாவி கொடுக்க ஒன்றரை மணி நேரம் எடுக்குமாம்.

உலகப் பிரபல்யம் பெற்ற இந்த மணிக்கூண்டைப்பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு வேட்ஸ் அன்ட் ரீட்ஸ் என்ற கம்பனிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பனியின் சிரேஷ்ட ஊழியரான திரு ஜோன் வேர்ணன் இந்த மணி நாளாந்தம் ஒரு கணமேனும் பிசகின்றி இயங்குவதை மேற் பார்வை செய்யும் பொறுப்பேற்றிருக்கிறார்

உற்சவம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பருளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்றம் இம்மாதம் 26-ம் திகதிபுதன் கிழமை நடைபெறவிருக்கிறது' தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழாநடைபெற்று அடுத்த மாதம் 7-ம் திகதி தேர்த்திருவிழாவும் 8-ம் திகதி திருவடி நிலை தீர்த்தக்கரையில் தீர்த்தமும் நடைபெறும் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் நிகழும்.

இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமாகும்

— இந்திரா

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஏராளமான அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருப்பதாலும் அவர்களின் நலன்களில் இந்தியா அதிக அக்கறை எடுக்கவேண்டியிருப்பதாலும் இந்தியாவின் பல அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமாக நேரலாம் என்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி கூறியிருக்கிறார்.

அகதிகள் விஷயத்தில் சர்வதேச ஆதரவு முழுக்கவும் போதுமானதாக இல்லை எனவே இதன் பிரதான சுமையைத் தானே ஏற்றுக் கொள்ள இந்தியா தயாராகவிருக்கின்றது. இந்தச் சுமையை எப்படியாவது நாம் சமாளிப்போம் என்றார் பிரதம மந்திரி.

முஜிபுர் ரஹ்மானை விடுவிக்க கோரிக்கை

புதுடில்லி, மே 18

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை விடுவிக்க உதவும்படி வங்காளதேச அரசின் விஷேஷத் தூதுவர் திரு. அப்துல் சலாம் ஆஸாத் ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டையும் உலக நாடுகளையும் கேட்டிருக்கிறார்.

'மேற்கு பாகிஸ்தான் ராணுவத்தினால் எங்கள் தலைவர் சித்திரவதை செய்யப்படுவதாக நாங்கள் அஞ்சுகிறோம்' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

வங்காளதேசப் பிரதிநிதியொருவர் ஐ. நா. பாதுகாப்பு சபையில் தோன்றி எமது நிலைமையை எடுத்துரைக்க சந்தர்ப்பம்கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

இந்திய கிழக்குப் பாகிஸ்தான் விவகாரங்களில் தலையிடுவதாக மேற்குப் பாகிஸ்தான் பிரசாரம் செய்வதை அவர் அப்பட்டமான பொய் என்று வர்ணித்தார்.

வங்காளதேச மக்கள் இந்தியாவில் அடைக்கலம் புகும் வகையில் நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள் என்றும், பக்கத்திலுள்ள ஒரே நாடு அதுதான் என்றும் எமது மக்களைத் திரும்பி ஓடும்படி துரத்தாமலிருப்பதற்காக இந்திய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தாங்கள் நன்றியுடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட

இஸ்ரேலிய அதிகாரியை கொலை செய்வார்களாம்

துருக்கி புரட்சிவாதிகள் விடுத்துள்ள எச்சரிக்கை

இஸ்தான்புல், மே 18

துருக்கியிலுள்ள இஸ்ரேலிய ராஜதந்திரியைக் கடத்திச்சென்றவர்கள் இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்திருக்கிறார்கள்.

இஸ்ரேலிய கான்சல் ஜெனரல் கடந்ததிங்களன்று கடத்திச்செல்லப்பட்டார். துருக்கி சிறையிலிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் இதர உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் இஸ்ரேலிய ராஜதந்திரி கொலைசெய்யப்படுவார் என்று அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இஸ்ரேலிய ராஜதந்திரி உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டும் இல்லையெனில் இந்தக்கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய யாவரும் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுவார்கள் என்று துருக்கி பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கைவிடுத்திருக்கிறார்.

ஐரோப்பிய பொதுச்சந்தை விவகாரம்: முட்டுக்கட்டைகள் தகர்ந்தன

பிரஸல்ஸ், மே 18

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்து கொள்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டைகள் தளர்ந்திருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டது. பிரிட்டனின் பிரதம மத்தியஸ்தரான திரு. ஜியோ பிரேரிப்பனும் ஐரோப்பிய அமைச்சர்கள் சபைத் தலைவரான திரு சுச்மெனும் இந்த அபிப்பிராயத்தைக் கூட்டாகத் தெரிவித்தனர். ஒரு முழு இரவு உட்பட இரு தினங்களாக தொடர்ந்து நடைபெற்று முடிந்த இப்பேச்சுக்களில் பல விவகாரங்கள் குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுங்க வரிக் கோட்டா, விவசாய மாற்று ஒழுங்குகள், சாம்ராஜ்ய நாடுகளைக் கூட்டுச் சேர்க்கும் அந்தஸ்து போன்ற பல விஷயங்களில் இப்பேச்சுக்களின் பயனாக உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சீனி உற்பத்தி செய்யும் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து பொதுச்சந்தை நாடுகள் சீனியை இறக்குமதி செய்வது குறித்து ஓர் உடன்பாடு ஏற்படும் நிலை வந்துள்ளது. இது பற்றி இறுதி உடன்பாடு செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இதன் விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

ஐரோப்பிய பொதுச் சந்தை விவகாரம் சம்பந்தமான அமைச்சர்கள் ரீதியான அடுத்த மாநாடு லுக்ஸம்பேர்க் நகரில் ஜூன் மாதம் 7ம் திகதி நடைபெறும். ஐரோப்பியபொதுச் சந்தைக்கான கூட்டு வரவு செலவுத் திட்டத்திற்கு பிரிட்டனின் பங்குத் தொகைபற்றி ஆறு ஐரோப்பிய நாடுகளும் ஒரு பொதுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளன. இதுபற்றி அடுத்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

பிரஸல்ஸில் நடைபெற்ற பேச்சுக்கள் பெரிதும் வெற்றியளித்துள்ளதாக பிரிட்டனின் பிரதம மத்தியஸ்தரான திரு ரிப்பன் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வேர்ட் ஹீத்தும், பிரெஞ்சு ஜனாதிபதி பொம்பிடோவும் பாரிஸில் சந்திக்கவிருப்பதாகத் தெரிவித்த திரு ரிப்பன், இரு தேசத் தலைவர்களினதும் பேச்சுவார்த்தைகள் முக்கியமாக ஐரோப்பிய பொதுச் சந்தையின் எதிர்காலம் பற்றியதாக இருக்குமெனக்குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம் ஒரு கல்வி

ஆச்சார்யா சங்கரராவ்தேவ்

ஜனநாயகம் என்பது மக்களுக்குக் கல்வி புகட்டும் ஒரு முறையாகும். கல்வியில் பிரம்பிற்கோ, வன்முறைக்கோ இடமேகிடையாது. ஜனநாயகம் தொடர்ந்து கல்வி புகட்டும் முறையாக இருப்பதால் அதைச் செய்யக்கூடியவர்கள் ஆசிரியர்களாகத்தான் இருக்கமுடியும். சிறு குழந்தைகளுக்கு மாத்திரமின்றி பிரஜைகளுக்கும் ஆசிரியர்கள் கல்வி புகட்டவேண்டும். சமுதாயத்தில் உள்ள ஒரு சிலரின் ஒழுக்கங்களை மாத்திரம் சரிப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கை முறைகளைச் சீர்படுத்துகிற பிரச்னை அல்ல இது. ஜனநாயகம் சரியான முறையில் செயல்படவேண்டுமென்றால் சமுதாய முழுவதற்குமான கல்வி தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கவேண்டும்.

அதிகார அரசியல் அல்ல சேவை அரசியல்

அதிகாரத்தால் மனதை மாற்ற இயலாது. அதிகபட்சமாகப்போனால் நிர்ப்பந்தம் கொடுக்கத்தான் அதனால் முடியும். சொல்தான் மனதை மாற்றவல்லது. எனவே காந்தியடிகள் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஓர் அரசியல் கட்சி என்ற நிலையிலிருந்து கலைத்துவிடவேண்டும் என்று யோசனை கூறினார். காங்கிரஸ் அரசியலைத் துறந்துவிடவேண்டுமென்று அவர் விரும்பவில்லை. இதைப்பற்றி ஒரு தவறான அபிப்பிராயம் நிலவுகிறது. காந்தியடிகள் உண்மையான அரசியலுக்காக வாதாடினார். மதத்தில் தமக்கு இருந்த நம்பிக்கைதான் தம்மை அரசியலில் ஈடுபடத்தூண்டியது என்றார் காந்திஜி. ஆனால் காந்தியடிகளின் அரசியல் அதிகார அரசியல் அல்ல அவருடைய அரசியல். 'சேவை அரசியல்' 'அதிகார அரசியல்' இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சர்வோதயம் விரும்புவது 'சேவை அரசியல்'தான். காந்திஜி அதற்காகவே பாடுபட்டார்.

கம்யூனிஸமும் சர்வோதயமும்

கம்யூனிஸத்திற்கும் சர்வோதயத்திற்கும் என்ன வேறுபாடு என்று சிலர் கேட்கக்கூடும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது கம்யூனிஸமும் சர்வோதயமும் ஒரே மாதிரியாகத் தோன்றும். ஆனால் அடிப்படையான வேறுபாடுஉள்ளது. அது ஒளிக்கும் இருளுக்கும் இடையேஉள்ள வேறுபாடுபோன்றது. சர்வோதயக்கருத்துக்கள் பிடிக்கவில்லை என்றால் அதற்காக கம்யூனிஸம் என்ற போர்வையை அதன் மேல் போர்த்தவேண்டாம். உண்மையிலேயே சர்வோதயக் கருத்துக்களை நன்கு புரிந்துகொண்டு அதன்பின் ஏற்றுக்கொள்ளத் தயங்கினால் அக்கருத்துக்களை எதிர்க்கலாம். சர்வோதய அன்பர்கள் அஹிம்சை வாதிகள். அவர்களின் வழி சரியான வழி என்பதில் அவர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இன்று எதிர்ப்போரும் நாளை உணர்ந்து இவ்வழியினை ஏற்பார்கள் என்ற பூரண நம்பிக்கை அவர்களுக்குண்டு.

காந்தி வழி

கம்யூனிஸம் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறிக்கொள்கிறது. ஆனால் இன்று அதில் தோல்வி கண்டுவிட்டது என்பதைக் கண்டு கொண்டோம். அந்தத் தத்துவமோ கருத்தோ தோல்வியடைந்து விட்டதாகக் கூறமுடியாது அதனுடைய வழிகளே தோல்வியடைந்துவிட்டன இம்சை தோல்வி காண்கிறது. ஏனெனில் முன்னரே சொன்னது போல அது தன்னைத்தானே தோல்வியுறச் செய்துகொள்வது. எனவே எந்த இலக்குக்கும் அழைத்துச் செல்லாதவழி நெடுந்தூரமாகவோ குறுகிய தூரமாகமோ இருக்கிறது என்று சொல்லமுடியுமா என்ன? இலட்சியத்திற்கு நம்மை உறுதியாக இட்டுச் செல்லும் ஒரேவழி நெடுந்தொலைவாக இருந்தாலும் இலட்சியத்தை அடைவதில் அது தானே சுருக்கு வழி! ஆம் அதுவே காந்தி வழி.

தீக்கிரையான வீடுகளுக்கு நிவாரணம்

குடிநகர் செவ்வண்மையில் மண்டைதீவில் தீக்கிரையான வீடுகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இத் தீ விபத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகட்ட உதவிசெய்வதற்கும் காணியற்றவர்களுக்கு இங்குள்ள அரசாங்க நிலத்தில் காணிகள் கொடுப்பதற்கும் மண்டைதீவு கிராமசேவையாளர் எஸ் கனகலிங்கம் காரியதிகாரியின் ஏற்பாட்டுக்கமைய நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

கூட்டு பிரார்த்தனை

யாழ்ப்பாணம் செவ்வாய் திருநெல்வேலி அநாதை இல்ல மாணவமாணவியரின் கூட்டுபிரார்த்தனை டாக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நூற்றுக்குமேற்பட்ட அநாதை மாணவமாணவிகள் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர் விநாயகர் முருகன் நால்வர் படங்களைவைத்து அநாதை இல்ல மாணவமாணவிகளும் இந்து நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்மற்றும் பிரமுகர்களும் யோகசுவாமிகளின் நற் சிந்தனைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பாடி வழிபாடாற்றினர் இந்துநலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இப்பிரார்த்தனை வைபவத்தில் வெள்ளைக்காரப் பெண்கள் இருவரும் கலந்துகொண்டனர் அமெரிக்கரான இவர்களிருவரும் அளவெட்டியிலுள்ள அமெரிக்கரான சுப்பிரமணியசுவாமிகளின் ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்களாவர், இவர்களும் அமெரிக்கநாட்டைச் சேர்ந்தவர்களாம்'

பிரார்த்தனை முடிவில் மாணவியான செல்வி சுலோசனாவாடுக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார் மகேஸ்வர பூசையும் நடைபெற்றது

'உடனடியாக மின்சாரம் வழங்குக'

சுழிபுரம், செவ்

சுழிபுரம் கிராம சபைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாததால் மக்கள் மிகுந்த கவலைக்குள்ளாகியுள்ளனர். மின்சாரவேலைகள் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்த வேலைகள் கையொப்பமாகி ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை விநியோகம் சம்பந்தமாக எவ்வித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை, உடன் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுழிபுரம் கிராமசபைக்குட்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்

இடமாற்றம்

அரியாலை, செவ்வாய்

வெளிமடு அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. நா. ஜெயநாயகம் அராலி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புராணபடனம்

அரியாலை, செவ்வாய்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நேற்றுமுதல் கந்த புராண படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசேட பூஜைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்புராண படனம் தொடர்ந்து மூன்று மாதங்கள் நடைபெறும்.

கரபந்தாட்டம்

அம்பன், செவ்வாய்

மந்துவில் விளையாட்டுக் கழகத்திற்கும் அம்பன் பிங்பொங் கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் அம்பன் பிங்பொங் விளையாட்டுக்கழகம் 2--1 கேம்ஸால் வெற்றியீட்டியது.

விஸ்வமடுவில்

2 ஆயிரம் வாலிபர்கள் குடியேற்றப்படுவர்

அம்பன், செவ்வாய்

யாழ் மாவட்டத்திலுள்ள 2000 படித்த வாலிபர்களுக்கு விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தின் கீழ் விரைவில் காணி வழங்கப்படவிருக்கின்றதென வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி பிரிவில் நடைபெற்ற காணிக்கச்சேரியின் போது காணி அதிகாரி திரு கே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலிருந்து மொத்தமாக 5800 க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், வடமராட்சிப்பகுதியிலிருந்து 350 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த அவர் 2000 விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்யப்படுமிடத்துத்தகுதி அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுமென்றும் இதில்தரம் பிரிக்கும்முறை கையாளப்பட்டு பிரிக்கப்படும். 50 பேருக்கு முதலிலும் அடுத்து 115 பேருக்கும் பின்னர் மிகுதிப்பேருக்கும் காணிகள் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார். இத்திட்டத்தில் காணிபெறுவதற்கு பட்டதாரி மாணவர்களும் விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

0 0 0

பருத்தித்துறை, செவ்வாய்

விஸ்வமடு படித்த வாலிபர் திட்டத்திற்குப் படித்த வாலிபரைத் தெரிவுசெய்வதற்கான காணிக்கச்சேரி வடமராட்சி மேற்குக்காரியாதிகாரிகந்தோரில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் காணி பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். .....

அன்வர் சதாத்

கெய்ரோ, மே 18

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத் அரபு சோஷலிஸக் கட்சிக்கு 9 பேர் கொண்ட மத்திய பீடம் ஒன்றை நியமித்திருக்கிறார். இக்குழு தற்காலிகமாக இயங்குமென்றும் பின்னர் புதிய சபை ஒன்றும் நியமிக்கப்படுமென்றும் தெரிவித்தார்

உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக இலங்கையின் விவசாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னோடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச்சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்

த. பெ. இல. 11, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு 'கிரிக்கெட் புதிர் போட்டி' முடிவுகள் முற்றும் சரியான விடைகள் யாரும் தரவில்லை

பரிசு பெறுவோர்; பரிசளித்தோர் விபரங்கள்

யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய கிரிக்கெட் போட்டி என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ், யாழ். மத்திய கல்லூரி ஆகியவைகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியை போட்டி கடந்த இரண்டு வருடங்களாக "ஈழநாடு" புதிர் போட்டி நடத்திவருவதும் இப்போட்டியில் கிரிக்கெட் பிரியர்கள் உற்சாகத்துடன் பெருமளவில் கலந்துகொள்வதும் வாசக நேயர்கள் அறிந்ததே.

சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற யாழ். சென் ஜோன்ஸ்-யாழ். மத்திய கல்லூரிகளுக்கிடையேயான பெரியபோட்டியையொட்டி 'ஈழநாடு' புதிர் போட்டியொன்றை மிகக்குறுகிய காலத்துக்குள் அதாவது ஒரு சில தினங்களுக்குள்தான் நடாத்தியது. ஆயினும் இப்போட்டியில் மிகப்பெருந்தொகையானோர் கலந்துகொண்டதால் கிரிக்கெட் போட்டிமுடிவடைந்த சில தினங்களுக்குள்ளேயே விடைகளைப் பரிசீலனை செய்து போட்டி முடிவுகளை அறிவிப்பதில் சிரம ஏற்பட்டது. இதன் பின்னர் நாட்டில் எதிர்பாராத நெருக்கடியேற்பட்டதும் தாமதம் ஏற்படக் காரணமாயிற்று.

நடுவர்கள் குழு தனது பணியைச்செவ்வனேசெய்து முடித்துள்ளது புதிர்போட்டியில் பரிசுபெறுவோரின் விபரங்களும் பரிசுகள் தந்துதவிய அன்பர்களின் விபரங்களும் இங்கு தரப்படுகின்றன.

போட்டியில் கலந்துகொண்ட கிரிக்கெட் பிரியர்களுக்கும் பரிசுகள் தந்துதவிய அன்பர்களுக்கும் 'ஈழநாடு' தனஉளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதிர்ப்போட்டியில் பெருந்தொகையானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்ட போதிலும் மொத்தம் எட்டுக்கேள்விகளுக்கும் எவரும் சரியான விடைகளை அனுப்பவில்லை. ஏன் ஏழு, ஆறுவிடைகள் கூட யாரும் சரியாக எழுதவில்லை.

ஆகக்கூடிய சரியானவிடைகளை எழுதிய ஐவருக்கும் முதல்ஐந்து பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்ப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:-

முதற் பரிசு

ஆ குணசிங்கம் 265, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்:

2-வது பரிசு

த ஜெயராஜ், பஞ்சகிரி, தெல்லிப்பழை

3-வது பரிசு

எம் தேவதாஸ் 38, சென் பற்றிக்ஸ் வீதி, றெக்கிளமேசன் யாழ்ப்பாணம்

4-வது பரிசு

செல்வி ஏ சுஜாத்தா 65, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்

5-வது பரிசு

செல்வி கே சிவஞான வேணி 23/1, றக்கா வீதி, ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்

இப்போட்டிக்கு பரிசுகள் வழங்கியோர் விபரம் வருமாறு:-

'ஸ்ரில்' புகைப்படப் பிடிப்பாளர் திரு. கனகலிங்கம் (சிட்டு)

யாழ். மெட்டல் இன்டஸ்ரீஸ் ஸ்தாபனம்

'லிங்கம் ரெக்ஷன்' பிரதான வீதி, யாழ்ப்பாணம்

'பிறின்ஸ்' ஸ்ரூடியோ பிரதான வீதி, யாழ்ப்பாணம்

திரு. ரி. கணேசன் 'ஹரி' ஒலி ஒளி அமைப்பாளர், சப்பல் வீதி யாழ்ப்பாணம்

காலஞ்சென்ற பிரபல விளையாட்டு வீரரும், யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவருமான திரு. வி ரி மகாலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இவரின் சகோதரர் திரு வி ரி சிவலிங்கமும் ஒரு பரிசை வழங்கினார்

.....

சாம்ராஜ்ய எம். பிக்களின் பரஸ்பர விஜயம்

லண்டன், மே.18

இலங்கை உட்பட சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 63 பாராளுமன்ற அங்கத்தவர்கள் சென்ற வருடம் பிரிட்டனுக்கு விஜயம் செய்தனர். அதேவேளை 50 பிரிட்டிஷ் சாம்ராஜ்யஉறுப்பினர்கள் சென்ற வருடம் சாம்ராஜ்ய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டனர். சாம்ராஜ்ய பாராளுமன்ற சங்கத்தின் ஆதரவிலேயே இவ்விஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

சாம்ராஜ்ய பாராளுமன்ற சங்க பிரிட்டிஷ் கிளையின் வருடாந்த மகாநாட்டில் உரை நிகழ்த்திய பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. ரிச்சாட்வூட் இத்தகைய பரஸ்பர விஜயங்களை வரவேற்றதுடன் நேரடியான தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதெனத் தெரிவித்தார்.

மக்கள் சபையின் சபாநாயகர் திரு. செல்வின் லியோட் இம் மாநாட்டில் தலைமையுரையாற்றுகையில் மாநாட்டிற்கு வருகை தந்த இருபத்தொரு வெளிநாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை வரவேற்றார்.

"பிற் சமுதாயம் முன்னேற

திருமுறைவழிகளை இளைஞர் பின்பற்ற வேண்டும்"

தாவடி, செவ்வாய்

"இளைஞர்கள் திருமுறைகளை முறைபிறழாமல் பாடிப் பழகுதல் வேண்டும். திருமுறைகளை ஓதுபவர்கள் சைவ சின்னங்களை அணிதல் சிறப்பாகும். எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டிகளாக உள்ள இளைஞர்கள் இதில் முக்கிய பங்கெடுத்தல் வேண்டும்" எனக் கொக்குவில் ஜோதி பஜனைக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய மா. சங்கரலிங்கம் சுவாமி கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: "ஒருவர் சொல்லிக் கொடுக்க மற்றையோரும் சேர்ந்து பண்ணுடனும், பக்தியுடனும் இறைவன் புகழ் ஓதுதல் கூட்டு வழிபாடாகும். கூட்டுவழிபாட்டு பஜனைச் சபைகளையமைத்து சைவத்தை வளர்க்க இளைஞர்கள் முன்வரவேண்டும்.

சைவ சமயத்தில் பிறந்தவன், மந்திரமாகிய திருநீறு அணிய மறந்துவிடக்கூடாது ஞானப் பாலுண்ட ஞான சம்பந்தப்பெருமான் திருநீற்றின் பெருமையைத் திருமுறையின் கண்ணே எடுத்து விளக்கியுள்ளார். திருமுறை வழிகளை இளைஞர்கள் பின்பற்றினாலேயொழிய வரும் காலச் சமுதாயம் முன்னேற்றம் காணமுடியாது."

சங்கானையில் பஸ் டிப்போ: இ. போ. சபை ஆராயும்

தாவடி, திங்கள்

கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாணம் - சங்கானை குறுகிய பஸ்சேவை மானிப்பாய் வரையுமே நடைபெற்றதென்றும் இதனால் பிரயாணிகள் கஷ்ட நிலையிலிருப்பதாகவும் தெரிவித்து சங்கானை பஸ் பிரயாணிகள் சங்கம், போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனாவுக்கு அனுப்பிய மகஜர் பயனளித்துள்ளதென்று தெரியவருகிறது.

யாழ் பிரதேச இ. போ. ச. அதிகாரிகளைச் சங்கானை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் அண்மையில் சந்தித்துப் பேசியபோது பின்வரும் விஷயங்கள் ஊர்ஜிதம்செய்யப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திற்குக் கேந்திர ஸ்தானமாகச் சங்கானை இருப்பதால் இங்கே இ. போ. ச. டிப்போ ஒன்று அமைத்தல் பற்றி ஆராயப்படும்.

காலையில் தினமும் 7-30 மணிக்குச் சங்கானையிலிருந்து சுண்டிக்குழிக்குக் கட்டாய பஸ் சேவை ஆரம்பித்தல்.

யாழ்ப்பாணம் - சங்கானை பஸ் மானிப்பாயில் திருப்பப்படாமல் கந்தோர் அட்டவணைப்படி திருப்புதல்.

காலையிலும் மாலையிலும் சித்தன்கேணி - சுண்டிக்குழி பள்ளிக்கூட பஸ்சேவையை கட்டாய சேவையாக்குதல்.

தூதுக்குழுவில் சங்கானை பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தசாமி, செயலாளர் திரு. எஸ் எஸ். குலநாயகம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

வாரத்தில் இருமுறை

றிமாண்ட் கைதிகளை நீதிபதிகள் சந்திக்கின்றனர்

கோட்டை, செவ்

றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை நீதிபதிகள் வாரத்தில் இரு தடவைகள் சென்று பார்வையிடுகின்றனர்

இந்நீதிபதிகள் றிமாண்டில் உள்ளவர்களைச் சந்தித்து அவர்களது நிலை, நலன்கள் குறித்து விசாரிப்பதாகத் தெரிகிறது

மேற்படி றிமாண்ட் கைதிகளை அடிக்கடி நீதிபதிக்கு முன்னர் ஆஜர்செய்யும் வேலை இதனால் குறையும் என நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. நிஹால் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்

தற்போதைய அவசரகால நிலைமையின் கீழ் றிமாண்டில் வைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கைகளை உடனுக்குடன் நீதிபதிகளுக்கு அறிவிக்குமாறு மறியல்சாலை சுப்ரின்டன்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

...

விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

தச்சன் தோப்பு கொலை முயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை இம் மாதம் 21-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

1-ம், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில்ஆஜரான அட்வகேட் எம். சிவானந்தன் விசாரணையை இம்மாதம் 21-ம் தேதிக்கு பின்போடும்படி கேட்டுக்கொண்டார். 5-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஏ அமிர்தலிங்கம் 3-ம் எதிரி சார்பில் புறக்டர் ஜி. இராசரத்தினமும் ஆஜரானார்கள்

பௌத்த பிக்குகள் பிரார்த்தனை

புத்தகாயா, மே. 18

புத்தகாயாவில் பல்வேறு நாடுகளிலும்உள்ளபௌத்த பிக்குகள் சமீபத்தில் புத்த ஜயந்தி கொண்டாட்டத்தின் போது வங்காளதேச மக்கள் அனுபவிக்கும் இன்னல்கட்காக விசேட பிரார்த்தனை நடாத்தினார்கள் வங்காளபகுதி பௌத்த மக்கள் பெருமளவில் கொலை செய்யப்படுவதாக கைதிகளாக வெளியேறிய பௌத்த பிக்குகள் தெரிவித்துள்ளனர்,

வடபகுதி அசைஸ் விசாரணை

பருத்தித்துறை கொலை வழக்கு: சார்ஜன்ட் பெரேரா சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று ஆறாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

சாட்சியமளித்த பொலிஸ் சார்ஜன் எட்வின் பெரேராவை எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. கமலநாதன், அட்வகேட் ஜே. ஈ. பி. செரிபிம் ஆகியோர் குறுக்குவிசாரணை செய்தனர்

இவ்வழக்கில் பருத்தித்துறையிலுள்ள கொம்மாந்தறை என்ற இடத்தில் 69-ம் ஆண்டு அக்டோபர் 12-ம் தேதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம் சின்னத்தம்பி இராசதுரை கந்தசாமி பரமானந்தம் இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராஜ, சிவக்கொழுந்து நற்குணராசா ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் கூட்டத்தில் பொது நோக்கத்துடன், சுந்தரம் இரத்தினசிங்கம், கந்தையா தியாகராசா மற்றும் அவர்களுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கத்துடன் வந்துள்ளார்களென்றும் அதே இடத்தில் 1-ம் எதிரியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம், சுந்தரம் இரத்தினசிங்கத்தை கட்டுக்கொலை செய்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில், 1-ம் எதிரியான செல்வரத்தினம், குறித்த கந்தையா தேவராசாவை சட்டவிரோத கூட்டத்தின் பொது நோக்கத்தின்படி கொலைசெய்ய முயற்சித்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் 6 எதிரிகளும் சுந்தரம் இரத்தினசிங்கத்தை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், தேவராசாவை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் சி. கமலநாதன், புறக்டர் வி. பி சுந்தரலிங்கம், புறக்டர் ஜே சின்னத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார் 2-ம், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில், அட்வகேட் ஜே. ஏ. பி. செரிபிம், புறக்டர் வி. செல்லத்தம்பி புறக்டர் என் நடராசா, புறக்டர் வி இராமச்சந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் பூபாலன் ஆஜரானார். 6-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் கே. இரத்தினசிங்கம், ஆஜரானார் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் பூபாலன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு
பற்றினைவிடுப் பரமாத்மாவுக்கு
அர்ப்பணமாக எல்லாச் காரியங்களையும்
செய்பவனே, தாமரை இலையில் தண்ணீர்
போலப் பாவம் ஒட்டுவதில்லை
— கீதை.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

ஆங்கில வருஷப் பிறப்பிலிருந்து வருஷக் கணக்கு
5 - ம் திகதி (19 - 5 - 71)

கல்வியின் அவசரகாலம்

ஆட்சிமன்ற மேல் சபையில் இன்றைய நிலை பற்றி செனட்டர் எஸ். நடேசன் நிகழ்த்தியஉரை பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் ஆணித்தர மானவை. இடிந்தும் இன்று நாட்டைப் பீடித்துள்ள பிடைகளுக்கு மாற்று மருந்தாகவே. இக் கறய நெருக்கடியைத் தெளிவாக விளக்குவதா கவோ அமையவில்லை யென்பதைச் சொல்லத் தான் வேண்டும். ஆனலும் ஒழிக்கப்பட வேண்டிய ஒரு பிற்போக் கான சமுகமெனப்பொது வாகக் கருதப்படுவரும் செனட்டரையில் நீதிர நடவடிக்கைகளுக்குத் தர்மமாகச் செயலாற்ற வேண்டுமென்ற குரல் ஒலிக்கின்றதே யென்பது மிகவும் திருப்தி.

நாட்டில் என்ன நடந் தாலும் எந்தப் பிரச்னை தோன்றினலும் அதற்கு இலவசக் கல்வித்திட்டம் தான் காரணம் என்று மேல் சபையில் சாதா ரணமாகத்தாக்கிப் பேசப்படும் வழக்கத்தை விடுத்து செனட்டர் நடேசன் நாட்டுக்கேற்ற முறையில் பாடத் திட்டத்தை மாற்றி யமைக்கவில்லையென்று குறிப்பிட்டதன் மூலம் சரியானதையே சுட்டிக்காட்டியிருக்கிறார். இல வசக் கல்வித் திட்டம் சோஷலிஸ நோக்கத்தைக் கொண்டிருப்பினும் நாட்டுக்குப் பொருத்தமான முறையில் அதைத் தொடர்ந்துகல்விமுறையை அமைக்கத் தவறியதன் மூலம் படித்த வாலிபர் களின் வேலையின்மைத் திண்டாட்டத்தையே அது உருவாக்கியிருக்கிற தென்ற செனட்டர் நடே சனின் கருத்தை யார் தான் ஒப்புக்கொள்ள மறுக்கமுடியும்? இப்படிச் சொல்வதால் இலவசக் கல்வித்திட்டத்தை முற் ருக ஒழிக்கவேண்டும் அல் லது மாற்றியமைக்க வேண்டுமென்பது நமது கருத்தாகாது. ஒரு நாட்டின் குழந்தைகள் அனைத்துக்கும் அந்த நாட்டு அரசாங்கம் கல்வி யூட்டவேண்டியது அதன் மறக்கமுடியாத கடமை யென்பது எமது கருத்து. ஆனல் எதற்காகக்கல்வி யூட்டுகிறோம் என்பது தான் கேள்வி? கல்வியின் என்ன தேவையென்பதை அறிவதற்கு பொதுவில் என்னவேண்டுமென்பதை நாம் தெரிந்திருக்கவேண் டும். எங்கள் வாழ்க்கை யின் தத்துவத்தில் இருந்துதான் எங்கள் கல்விக்கான கோட் பாட்டை உருவாக்க வேண்டும். இது சமய அடிப்படைக்குக் கொண்டு போய்விடுமென் றது.

நாட்டை இன்றைய நிலையிலிருந்து விமோச னம் பெறச்செய்ய வேண்டுமானல் பெரும் நிபுணர்களுக்குத்தரா ளமான இருக்கவேண்டு மென்று தமது சகபாடி யினர்கள் மூலம் பண்டா ரவுப்பினருக்கு செனட்டர் நடேசன் கிடுத்தவேண்டுகோள் வஞ்சப் புகழ்ச்சியின் உச்சக்கட்டமென்றே சொல்லவேண்டும். பிற ரின் துயரத்தைக்கண்டு சகிக்காத துன்பங்களைத் துடைப்பதற்காக அரச யோகத்தையே துறந்த புத்தபிரானின் போதனை களையும் தருமம், கருணை, அன்பு, சகோதரத்துவம் ஆகியவைகளைப் போதிக் கும் இந்த, கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகிய மதங் களையும் பின்பற்றும் மக் கள் வாழும் நம்நாட்டில் "இயலாம் செய்பத்தவா ராகுக" என்று இந்தச் சமயத்திலும் வேண்டுகோள் விட வேண்டியிருக்கிறதே!

வாழும் ஒர் உறுதி யான சக்தி சமயம், இது கீழ் நிலைக்குச் சிலரால் கொண்டுவரப் பட்டுள்ளபோதிலும் இதன் இடத்தை நிரப்பு வதற்கு ஏதாவதொரு சித்த சோஷலிஸம் வருவ தற்கு காலவரையறை யின்றிக் காத்திருக்க முடி யாது, தன்னையும் தனது சக உறுப்பினரையும் உள்ளடக்கியின்றையநிலை மைக்கு முதியபரம்பரை தான் காரணம் என்று செனட்டர் நடேசன் குறிப்பிட்டிருக்கிறார். இன் றைய சந்ததியினருக்கும் முதிய பரம்பரையினருக் கிடையே இடைவெளியை நிரப்புவதற்குச் சமீபான கல்வியின் மூலமும் அதற் கேற்ற மாறுதல்களைச் செய்வதற்கான சட்டம் மூலமும் அரச முன் வரவேண்டியது அவசி யம்.

கல்விக்காகப் பெரும் தொகைப் பணம் செல விடப்படுகிறது. இதனுல் வேலையில்லாத் திண்டாட் டமும், மனித சக்தியின் விரையமும், ஆசிரியர் மாணவர்களுக்கிடையி லுள்ள தொடர்பின்மை யுமே கண்டபலன். புத் தக அறிவு சிறிது கிடைத் திருக்குமே தவிர கல்வி யறிவு கிடைத்ததாகச் சொல்லமுடியாது. சாதாரண கல்வி ஏதோ சிறிது கிடைத்திருக்கலாம்; வாழ்க்கைக்குத் தேவை யான கல்வி கிடைத்தி ருக்கமுடியாது; கைவினைப் பாடங்களை சில படித்தி ருக்கலாம்; பல்பாங் கடைப்படிக்கலாம். தங் களுடைய பாரம்பரியத்தி லிருந்து விலகிச்செல்ல வும், சமயத்திலிருந்து வேறுபடவும் பெரும் படையான மோசனை களாக் பாதிக்கப்படவும் கூடிய ஆண்களையும்பெண் களையும்தான் நாம் உரு வாக்கி வந்திருக்கிறோம்.

இந்நிலையில் புரட்சியை யும் மாற்சியையும் உரு வாக்கிய கல்வி முறைக் கெதிராகப் போராட வேண்டிய அவசிய மேற் பட்டுள்ளது. இதற்காக இலவசக் கல்வித் திட்டத்தை நீக்கவேண்டிய தில்லை. கல்வி எந்தெந்த அடிப்படையில் இலவசக் கல்வி முறை யைப் புனராலோசனை செய்யவேண்டும், நோக்கங்களை பெற்ற திருத்தவேண்டும் என்பதை பாராளுமன்ற திரு. ரீ. எஸ். எலியஸ், "பெருந் தோகையான வர்களுக்குக் கல்வியூட்ட வேண்டுமென உறுதியுண் டுள்ளோம். ஆனல் எதற் கென்பது ஆண்டவனுக் குத்தான் வெளிச்சம்" என்று குறிப்பிட்டிருக்கின் ருர். வேறும் பேராசிரி கல்வியை வைத்தே இவர் இவ்வாறு கருத்துத் தெரி வித்துள்ளார். இக்கருத்து நமது நாட்டுக் கல்வி முறைக்கு வெகு பொருத் தம்.

இன்றைய தேசிய நெருக்கடியான துயரம் மிகுந்தசமயத்தில் கல்விச் சீரமைப்பை மிக துரித மாகவும் விஞ்ஞானபூர்வமாக வும் மேற்கொள்ளவேண்டும். செலவுச் சுருக்கமான ஆனல் திறம் பயனுள்ள தாக அது இருக்கவேண் டும். சமுதாயத்தின் தாண்களாக ஆசிரியர்கள் விளங்கிய பழைய நிலை மையை ஏற்படுத்தவும், பிள்ளைகளிடம் தேவையை நிறைவேற்றவும் அவர் கள் படிக்கவும் உழைக்க வும் படித்துக்கொண்டே உழைக்கவும் படித்தபின் உழைப்பு நிச்சயம்கிடைக் கக்கூடியதாகவும் கல்விச் சீரமைப்பு அமையவேண் டும். மக்கள் தமக்கும் நாட்டுக்கும் தம்மைப் பயன்படுத்தவும் பிறரும் பயன்படுத்தவும் தகுதியே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும்.

பிரசவ விடுமுறை கோரும் ஆண் ஆசிரியர்

நியூயோர்க், மே 18

இங்குள்ள ஆசிரியர் (ஆண்) ஒருவர் தமக்கு பிரசவகால விடு முறை வேண்டும் என்று உள்ளூர் கல்வி சபைக்கு விண்ணப்பம் கொடுத் தார். ஆனல் ஆண் ஆசிரி யரும் குழந்தை பெற்றுக் மட்டுமே பிரசவ கால விடுமுறைப் பெறலாமே யன்றி அவரது மனைவி குழந்தை பெற்றதற்காக விடுமுறைப் பெற முடி யாது என்றும் அவருக்கு அடுக்கப்பட்டது. இந்த தீர்ப்பை எதிர்த்து மேறி அப்பீல் செய்துள்ளார். இந்த முடிவு தமது ஆண்மைக்கு இழுக்கு ஏற்படுத்துகிறது என்று அவர் வாதிடுகி ருர்.

நகரப் பள்ளி கல்வி அமைப்பின் சட்டங்க ளின்படி ஒரு பிள்ளை 5 வயது வரும்வரை பெற் ருர் பிரசவ கால விடு முறையும் பராமரிப்பு கால விடுமுறை யும் பெறலாம் என் றிருக்கிறது என்றார். ஒன் றரை வயதுள்ள குழந் தைக்குத் தகப்பனரும் ஏன் இந்த உரிமையைப் பெற முடியாது என்றும் அவர் கேட்கின்ருர்.

குழந்தையைப் பெரு விட்டாலும் பராமரிக்கும் தகுதி தமக்கிருக்கிறது என்று அவர் சொல்கிருர். ஆனல் கல்விச் சபை அதி காரி ஒருவர் இதுபற்றி குறிப்பிடுகையில் இந்த அப்பீல் நிராகரிக்கப்பட்டு விடும் என்ருர்

குழந்தையைப் பெற்று வளர்ப்பவர்கள் ஸ்ரீ தான் இந்தச் சட்டம் பொருந்தும் பிள் ளை பெறுவதையும் பராமரிப் பதையும் சட்டம் இரண் டாகவே பிரித்திருக்கிற தென்று அவர் விளக்கி ருர். திரு. ஆசிரியர் மனைவி நீட்டா தமது கணவரின் கருத்தை முற் ருக ஆதரிக்கிருர். 'இந்தக் கல்விச்சபை தகப்பனுக் கும் தாய்க்குமிடையில் வேற்றுமைகாட்டி பாரபட்சம் காட்டு கிறது' என்கிருர் அந்தப் பெண்மணி.

பெற்ரூலியம் கூடுஸ்தாபனத்தின் சாதனை

கோட்டை, செவ்வாய்

நாட்டிலுள்ள தனியார் துறை, அரசாங்க ஸ்தாப னங்கள் யாவற்றுக்கும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுஸ்தாபனமே பெற்றி தொகையான அன்னியச் செலாவணியை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கும் ஸ்தா பனமாகவிளங்குகிறது.

தற்போதைய நிலையிலும் கூட இவ்வருடம் மேற்படி கூட்டுஸ்தாபனம் 10 கோடி ரூபா அன்னிய செலாவ ணியை நாட்டுக்குப் பெற் றுக்கொடுக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மின்சாரம் வழங்கக் கோருவர்

கடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த சுமார் 40 வீடுகளு க்கு மின்சார விநியோகம் செய்யுமாறு கோரி இப்பகு திப் பொதுமக்கள் சார்பாக மின்சார சபையைக் கேட்டு மகஜரொன்றை அனுப்ப முயற்சி நடைபெற்று வரு கிறது. அரசாங்கத்தின் புரப்பொறுப்பி மின்சாரத் திட்டத்தின் கீழ் கரணவாய் தெற்கு இலகமம் வகுதி யில் முடிவடைந்திருக்கும் மின்சார இணைப்பிலிருந்து மின்சார விநியோகத்தை விஸ்தரித்து குறுக்கிட்டு, எவ்வளவு, முகிவரை மின்சாரம் வழங்கமுடி யுமோ அவ்வரை இவர்களே கோருவர்.

இலங்கைக்கு ஜப்பான்கடனுதவி

கோட்டை, செவ்.

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு 1 கோடி 80 லக்சம் ரூபாவை கடனுகவழங்கியுள்ளது.

நேற்று முன்தினம்இக் கடனை வழங்குவதற் கான ஒப்பந்தத்தில் கோக் கியோவில் திரு நாடுகள தும் பிரதிநிதிகள் பங் கேற்றிக் கொண்டனர்.

இப்பணத்துக்கு ஒரு வருடத்துக்கு 5 சதவீதப் படிவட்டி கொடுக்க இலங்கை அரசாங்கம் உடன்பட்டுள்ளது.

சாவகச்சேரி

நகரசபை உபதலைவர்

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி நகரசபை உபதலைவராக திரு எஸ். சே தர்மலிங்கம் 3 மேலதிக வாக்குகளால் தெரிவு செய் யப்பட்டுள்ளார். இவர் சாவகச்சேரி சமசமாஜக்கட்சி வாலிப முன்னணித் தலை வராவார்.

திரு. தர்மலிங்கத்தின் பெயரை திரு வே. கனகசபை முன்மொழிய திரு பி. ஆர். ஜெயரத்தினம் வழிமொழித் தார். இவருடன் போட்டி யிட்ட திரு. க. மயில்வாக னத்தின் பெயரை திரு பி. தம்பிப்பிள்ளை முன்மொழிய

காலியில் பொலிஸ் அதிபர்

காலி, செல்வாய்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ராங்லி சேனநாயக்கா காலிக்கு விஜ யம் செய்து பாதுகாப்பு நட வடிக்கைகள் பற்றி ஆலோ சனை நடத்தினர்.

இவருடன் தென்பிராந் திய உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ரத்ராராஜ சிங்கமும் வந்திருந்தார். காலி மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ராம நாயக்கா, காலி அரசாங்க அதிபர் திரு பி. உன்ன தென்ன காலி பொலிஸ் அதிபர் திரு வி. நவரத்தி னம் ஆகியோர் ஹெலி ஹோப்டர் விமானத்தில் வந்த இன்ஸ்பெக்டர் ஜெனரலை வரவேற்றனர்.

காலியில் நடந்த மகா நாடொன்றில் கலந்து கொண்ட இன்ஸ்பெக்டர் ஜெனரல் அங்கிருந்து மாத் தறைக்குச் சென்ருர்.

.....

விலைக்கட்டுப்பாட்டு வேலைகளில் இராணுவத்தினர்

கோட்டை, செவ்.

பொதுமக்கள் தங்களுக் குத் தேவையான அத்தியா வசிய பொருட்களைக் கஷ்ட மின்றி கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ள உதவுவதற்கு இராணுவத் தினர் ஈடுபடவிருக்கின்ற னர். இவர்களுக்கு அர சாங்கம் உணவுக்கட்டுப் பாட்டாதிகாரிகளின் வேலை களைக் கவனிப்பதற்கும் அதி காரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் இராணுவத் தினர் சில சந்தைகளுக்குச் சென்று அங்குள்ள வர்த் தகர்களை உணவுப்பொருட் கள்கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதற்குஉத்தரவிட்டுள்ள தோடு அதைக் கவனித்து முன்னனர்.

மற்றும் வெளியிடங்களில் இப்பொருட்களின் விநி யோகத்தை பொதுகாப்புப் படையினர் கவனித்துவரு கின்றனர்.

.....

டிப்போ

வேலைகளில் மாற்றம்

கோட்டை செல்.

நாட்டிலுள்ள சகல இ-போ-ச டிப்போக்களிலும் வேலைகளில் மாற்றமும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஹட்டன் பஸ் டிப்போ வைப்பார்வையிடுவதற் காக டிப்போ ஊழியர் மத்தியில் உரையாற்றுவ தில் இ-போ-ச அதிகாரி களில் ஒருவரான திரு. ஹொரத் மேற்கண்ட தகவல் வெளி யிட்டுள்ளார்.

நாட்டின் குழப்பநிலையி லும் மிகக் கடமையுணர்ச்சி யோடு நல்ல சேவையை ஆற்றியமைக்காக இ-போ-ச ஊழியருக்கு அவர் மேலும் பேசுகையில் நன்றி தெரிவித் தார்.

திரு எஸ். சிவசம்பு வழி மொழிந்தார். திரு தர்மலிங் கத்திற்கு 6 வாக்குகளும், திரு மயில்வாகனத்திற்கு 3 வாக்குகளும் கிடைத்தன. இரு உறுப்பினர்கள் வாக் களிப்பில் கலந்துகொள்ள வில்லை.

நகரசபைத் தலைவர் திரு சு. வைரமுத்துவினல் தலைமை யில் இத்தெரிவு நடைபெற் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org